**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்</u>**.165/2022

பெயர்-திரு.சரவணன் நாள்.10.09.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) தாவா சொத்து நான் சுயமாக வாங்கியதில்லை. எனது தாத்தா ராமண கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்து 5 செண்ட் விஸ்தீரணமாகும். எனது தாத்தாவிடம் இருந்து தாவா சொத்து எனது அப்பாவிற்கு வந்தது. பிறகு எனது அம்மாவும், அப்பாவும் 1998-ல் ஏ மற்றம் பி அட்டவனை சொத்தாக பாகம் செய்து கொண்டார்கள். எனது அப்பா காலம்சென்ற பிறகு தாவா சொத்து எனக்கும், எனது சகோதரர்களுக்கும் வாரிசு படி கிடைத்தது. எனது அம்மா 1-ம் வாதி ஆவார். 3-ம் வாதி எனது சகோதரர். நாங்கள் அனைவரும் தாவா சொத்தில் கூட்டுக்குடும்பமாக குடியிருக்கிறோம். எனக்கு திருமணமாகி, விவாகரத்து ஆகிவிட்டது. குழந்தைகள் இல்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டை நானும், மற்ற வாதிகளும் பழைய வீட்டை புதுப்பித்து 1998-ல் கட்டினோம். 2013-ல் மீண்டும் புதுப்பித்து விரிவு படுத்தி கட்டினோம்.

2) 2023-ல் மீண்டும் புதியதாக கட்டினோம் என்றால், இல்லை. தாவா சொத்தில் உள்ள வீடு 2023-ல்தான் கட்டியுள்ளோம் என்றால், சரியல்ல. தாவா வீடு கட்டும்போது முறையாக அனுமதி பெற்றுதான் கட்டினோம். தாவா சொத்திற்கான சொத்து வரி எத்தனை சதுரடிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால், ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் கட்டிடம் எத்தனை சதுரடிக்கு கட்டப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. பஞ்சாயத்தின் கட்டிட அனுமதி வரைபடத்தை பார்த்தால் என்னால், சொல்லமுடியும். பஞ்சாயத்து அனுமதி கட்டிட வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்யவில்லை. எத்தனை சதுரடிக்கு வரி செலுத்தியுள்ளேன் என்பதை **வா.சா.ஆ.2** சொத்துவரியை பார்த்து சொல்லமுடியவில்லை என்றால், சரிதான். தாவா சொத்தைப் பொறுத்து முறையாக வரைபடம் பஞ்சாயத்து மூலமாகவோ, பொறியாளர் மூலமாகவோ வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்யவில்லை.

3) 2013-ல் வீடு கட்டுவதற்கு முன்பு, தாவா சொத்தின் அமைப்பு எப்படி இருந்தது என்றால், சுற்றிலும் காம்பௌண்ட் சுவரும், நடுவில் வீடும்

இருந்தது. தற்போது, காம்பௌண்ட் சுவரை எடுத்துவிட்டு அத்திற்கு சுவர் எழுப்பி வீடு கட்டியுள்ளோம். அவ்வாறு வீடு கட்டுவதற்கு பேரூராட்சியில் அனுமதி பெற்றுள்ளோம். மேற்படி அனுமதி உத்தரவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வதுபோல் 2013-ல் வீடு எதுவும் கட்டவில்லை என்றாலும், 2023-ல் தான் புதியதாக வீடு கட்டும்போது பிரதிவாதியின் சொத்தில் 2 1/2 அடி ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளேன் என்றால், சரியல்ல. 2023-ல் நான் வீடு கட்டவேயில்லை. எங்களுக்கும், பிரதிவாதிக்கும் என்ன பிரச்சனை என்றால், எனது சொத்திற்கும் கிழபுறம் உள்ள சன்சைட் மற்றும் பைப்களை அகற்ற வேண்டும் எனவும், எனது கிழபுற சுவற்றை ஒட்டி பிரதிவாதி வீடு கட்ட வேண்டும் என 2022-ல் பிரச்சனை செய்தார், அதனால், பிரச்சனை ஏற்பட்டது.

4) 2022-ல் தான் வீடு கட்டினேன் என்றால், சரியல்ல. பிரதிவாதி 2022 ல் வீடு கட்ட வந்தபோதுதான் பிரச்சனை ஏற்பட்டது. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து, தாவா சொத்துக்களின் எல்லைகளை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய மனு செய்தேனா என்றால், இல்லை. நான் தனிப்பட்ட முறையில் கிராம நிர்வாக அலுவலர் மூலமாக 2022-ல் அளந்தேன். பிரதிவாதிதான் அவர்களை அழைத்து வந்தார். நீதிமன்ற ஆணையர் மூலம் சர்வேயர் உதவியுடன் அளக்க பிரதிவாதி மனு செய்வதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால், இல்லை. வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் மூலமாக தாவா சொத்தை அளந்தது பற்றி கூறியுள்ளீர்களா என்றால், இல்லை. ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வதுபோல், கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் அளக்கவில்லை என்றாலும், அதனால்தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

5) எனது சொத்தின் நான்கு பக்கங்களிலும் எல்லை கற்கள் இருந்தது. பிரதிவாதிகள் அதை பிடுங்கி எடுத்துவிட்டார்கள். அவ்வாறு பிரதிவாதிகள் எவ்வாறு என்றைய தேதியில், யார் முன்னிலையில் கற்களை பிடுங்கினார்கள் என்று வழக்குரையில் கூறவில்லை. மேற்படி சம்பவம் பற்றி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சேர்மேனின் கணவருக்கு தெரியும். சேர்மேன் கணவர் பெயர் செந்தில்நாதன். கிராம நிர்வாக அலுவலர் பெயர் தெரியவில்லை. எல்லை கற்களை பிடுங்கியது சம்மந்தமாக எழுத்து மூலமான புகாரை மேற்படி நபர்களிடம் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் பிரதிவாதிகள் எல்லை கற்கறை பிடுங்கவில்லை என்றால், சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.09.10 18:06:08 +0530

District Munsif